**தலைப்பு 56 – விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்ட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2020 ஒக்தோபர் 13 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்தம் மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய

வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைப்பு 56 – விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சு 2019 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த அமைச்சொன்றாக இருப்பதால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(iv) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கு மூலம் சீராக்க வேண்டிய விடயமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக ரூபா 483,500 தொகையான குறுக்கு பதிவு செலவினமும் மிகை அறவீடு ரூபா 1,537,549 உம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முழுச் செலவினத்தினுள் குறுக்கு பதிவுகள் உள்ளடக்கப்படுவதால் அவற்றை சீராக்கம் செய்வதற்கு நிதிச் செயலாற்றல் கூற்றில் சந்தர்ப்பமொன்று இல்லை. ஆதலால் காசு சீராக்க கணக்கினுள் அவற்றை பதிவு செய்வதற்கு நேர்ந்ததாகவும் கட்டுநிதி தீர்ப்பனவையும் அவ்வாறு பதிவு செய்வதற்கு நேர்ந்ததாகவும் முழுச் செலவினம் மிகை அறவீடு இல்லாமல் எடுக்கப்பட்டமையால் மிகை அறவீட்டுப் பெறுமதி சீராக்கக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதாக |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏசீஏ-சீ மாதிரி படிவத்தை அடிப்படையாக கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து | - மேற்படி - | அரச கணக்குகள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் காணப்பட்ட படிவத்தை பயன்படுத்தியதாக |

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று அந்த படிவத்திற்கு இணங்கியிருக்க வில்லை.

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றில் வைப்புக்கள் பெறுவனவு மற்றும் முற்பண பெறுவனவு முறையே ரூபா 106,786 மற்றும் ரூபா 147,669 ஆக இருந்த போதும் அப்பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்குகள் சரியாக தயாரிக்கும் தேவைப்பாடு | “நிதிச் செயலாற்றல் கூற்றுக்கள் முடியுமான வரை பணமாக செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்” என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகவும் முற்பணம் மற்றும் வைப்புக்கள் பெறுவனவு ரூபா 254,445 தொகை குறுக்கு பதிவாக இருப்பதால் அவை உள்ளடக்கப்படவில்லை எனவும் |
| (அ) | ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 242,325 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 1,564,799 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதி பெறுபேறுகள் ரூபா 1,322,474 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்வதாகவும் திறைசேரி இறுதி கணக்கு கூற்று (SA – 21 ) இன் பிரகாரம் தெளிவாக ஏனைய கட்டுநிதி பெறுவனவு ரூபா 1,564,799 எனக் காண்பிக்கப்பட்டுள்ளதால் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்ட கட்டுநிதி பெறுவனவு பெறுமதி திறைசேரி இறுதிக் கணக்கு கூற்று (SA -70) உடன் சமப்படுவதாக |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் கீழ் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 242,325 ஆன பெறுவனவுகள் தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்படாமை காரணமாக தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - | வருமானமற்ற பெறுவனவு களின் கீழ் வகைப்படுத்தப் படாமையால் மொத்தக் கூட்டுத்தொகையும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக |
| (ஆ) | தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 49,974,698 ஆக இருந்த போதும் அது 96,873,922 எனக் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் காண்பிக்கப் பட்ட காரணத்தினால் ரூபா 46,899,224 தொகை காசு வெளிப்பாய்ச்சல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு | காசுப் பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் போன்ற உருப்படிகளின் கீழ் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகை பதிவு செய்யப்பட்டதாக |
| (இ) | மீளாய்வாண்டின் போது முற்பணமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 541,091 ஆன பெறுமதியும் முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 706,702 ஆன பெறுமதியும் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீட்டு கையேற்றல்களுக்காக ரூபா 27,474,506 ஆன கொடுப்பனவும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கப் பட்டிருக்கவில்லை. | 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கும் தேவைப்பாடு | முதலீட்டுச் செயற்பாடுகள் இடம்றொமையால் அதன் பெறுமதி உள்ளடக்கப் படவில்லை என்பதாக |

### 1.6.4 கட்டுநிதி கணக்கு

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 17,838,757 ஆக இருந்த போதும் அம்மீதி ரூபா 19,386,269 ஆன காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,547,512 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்கும் தேவைப்பாடு | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்வதாக |
| (ஆ) | அமைச்சின் திரட்டிய விரிவான பரீட்சை மீதியின் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் திறைசேரி இறுதி கணக்கு கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையே ரூபா 464,614 ஆன வேறுபாடொன்று கட்டுநிதி சீராக்கக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தின் பதிவேடுகளின் மீதிகள் திறைசேரியுடன் இணங்கும் தேவைப்பாடு | ஆண்டின் இறுதியின் போது முற்பண மீதிகளை கையேற்றல் மாற்றல் பத்திரங்கள் மூலம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டமையால் பரீட்சை மீதி மற்றும் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றுகளுக்கு இடையே வேறுபாடு உள்ளதாக |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 செலவின விடயங்களுக்குரிய ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 29,730,000 ஆன நிதிஏற்பாடுகளில் எவ்வித பயன்பாடும் இல்லாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளை உயர்ந்த அளவில் பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 42 ஆக இருந்த போதிலும் செயற்பாட்டு செயற்பாடு களுடன் தொடர்புடைய 15 ஊழியர்கள் காணப்பட்டதுடன் பட்டதாரி பயிலுனர் உத்தியோகததர்களே ஊழியர்களாக செயற்படுவதாக. |
| (ஆ) | 12 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டில் 35 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | 2019 மார்ச் மாதத்தின் போது அமைச்சு வர்த்தமானி மூலம் ஸ்தாபிக்கபட்டிருந்ததுடன் 2019 நவம்பர் 20 ஆந் திகதி மீண்டும் |

மூடப்பட்டதன் காரணமாக செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியளவு போதுமான காலமொன்று இருக்கவில்லை.
அவ்வாறே குறைந்த பதவியணியினர் காரணமாகவும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.